1974 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதிக் கோரிக்கைகள், வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதம் நடைபெறும்.

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) முதலமைச்சர் ஒரு நிதிக் கோரிக்கையை முன்மொழிவார் என்று அறிவிக்கையில் கொடுக்கப்பட்டிருந்தும், பொதுப் பணித் துறை அமைச்சர் அக்கோரிக்கையை முன்மொழிந்தது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். ஒவ்வொரு மானியத்திற்கும் எவ்வளவு தொகை வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் டிமான்ட் நம்பர் 11-ஐ பொறுத்தவரையில், இந்த ஆர்டர் பேப்பரில் சீப் மினிஸ்டர் முன்மொழிவார் என்றுதான் இருக்கிறது. அதற்குப் பதிலாக ரெவின்யூ அமைச்சர் முன்மொழிந்திருக்கிறார். பொதுவாக பதில் சொல்வது எந்த அமைச்சராக இருந்தாலும் இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட அமைச்சர்தானே முன்மொழிய வேண்டும். அதுபற்றி தங்கள் தீர்ப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே இப்படிப்பட்ட ஒரு பிரச்னை எழுப்பப்பட்டு, இந்த மன்றத்தில் அதற்குத் தீர்ப்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

When a Member observed that the Home Minister had moved Demands for Grants relating to departments not within his portfolio, the Speaker pointed out that there was collective responsibility of the Cabinet to the Legislature and that any Minister could speak on any subject.''

ஆகவே, இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, they can speak on any subject but can they move the Demands for Grants . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாம் பண்ணலாம்.